எனவே அரசு நிராகரிக்கிறபோது நாம் மட்டுமல்ல, மொத்தமாக தமிழ்நாட்டிலே உள்ள கனிம வளங்களை பொறுத்தவரையில் அவர்கள் மத்திய அரசுக்கு மனுச் செய்கிற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அதை மீண்டும் தமிழக அரசுக்குத்தான் அனுப்புவார்கள். இங்கே அனுப்புகிறபோது தமிழ்நாடு அரசுக்குத் தேவை என்று காரணம் கூறி அதை மறுக்கிற உரிமையும் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஆ) வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(இ) திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் பேத்துவாரம்தாரர்கள் சட்டமுன்வடிவு 1981.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள், தமிழ்நாடு பேத்துவாரம்தாரர்கள் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.